*தஞ்சை துணைக்கோட்ட குற்றவியல் நீதிமன்றம்.

524—(*வினா எண். 9771) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாநகரில் இயங்கிவரும் துணைக் கோட்ட குற்றவியல் நீதிமன்றத்தை மாவட்ட நீதிமன்ற வளாகத்திலுள் அமைக்க திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

மாவட்டங்களில் மக்கள் நீதிமன்றங்கள்

525—(*வினா எண். 10805) திரு. சைதை சா. துரைசாமி, திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட தலைநகரங்களில் மக்கள் நீதிமன்றங்கள் துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் நீதிமன்றங்கள் எப்போது துவக்கப் படும்? எந்தெந்த மாவட்டத் தலைநகரங்களிலே முதன் முதலிலே அமைக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்கிற விவரத்தையும், இந்த மக்கள் நீதிமன்றத்தில் என்னென்ன வழக்குகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிட்சார்த்தமாக 15—2—1986 அன்று தமிழகத்திலே மக்கள் நீதிமன்றம் முதன் முதலாகத் துவக்கப்பட்டது. அது நல்ல வெற்றியை, பலனைத் தந்திருப்பதை அரசு அறிந்திருக்கிறது. அதன் காரணமாக அனைத்து மாவட்டத்திற்குமே